1972 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போயும், போயும் மத்திய அரசிடத்தில் முத்தத்திற்காக ஒரு பரிந்துரை செய்வது என்பது அவ்வளவு சரியாக இருக்காது. தைவிட பல நல்ல காரியங்கள் நாட்டிற்குத் தேவையாக இருக்கின்றன. அவைகளுக்கு மத்திய அரசோடு வாதாடுவது நல்லது. நண்பர் கோவை செழியன் அவர்கள் இந்த முத்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுவது நல்லது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆபாசம் என்பதற்கு தணிக்கைக் குழு அகில இந்தியாவுக்கும் ஒரே இலக்கணம் வைத்திருக்கிறதா ? அல்லது, மாநிலத்திற்கு மாநிலம் அதன் கலாசாரம், பண்பாடு இதற்கேற்றவாறு படங்கள் தணிக்கை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்திற்கு மாநிலத்திலுள்ள கலாசாரத்திற்கேற்றவாறு என்று சொல்லப்படுகிறது என்றாலும், இந்தியாவில் இருக்கின்ற வேறு மாநிலங்களிலுள்ள படங்கள் தமிழ் நாட்டில் அகில இந்திய ரீதியில் அனுமதிக்கப்படுகின்றன. ஆகவே, இந்திய ஒருமைப்பாடு, ஒரே நாடு என்கின்ற அளவில் படங்களைப் பொறுத்த வரையில் கலாசாரம் வேறுப்பட்டிருக்கிற காட்சிகளைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து வருகிற படங்களைவிட வேறு பல மாநிலங்களிலிருந்து, வடக்கே இருந்து வருகிற பல படங்களில் எங்கெங்கே எது எது ஆபாசம் என்று கருதி சொல்லப்படுகிறதோ—ஆபாசமாக இருக்கிறதா, இல்லையா என்று நாம் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது—எதை ஆபாசம் என்று கருதுகிறோமோ அதைவிட அதிகமான ஆபாசக் காட்சிகள் இருப்பதை நாம் காண்கிறோம். அதற்காகத் தான் அந்தந்த மாநில அளவில் படங்களைத் தரமாக அமைப்பதற்குத் தணிக்கைக் குழுக்கள் மாநில அளவில் இருக்க வேண்டும் என்கின்ற கருத்தை நாம் பல ஆண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the standard of pictures is going down and this is happening not only in any particular language, but in all languages. The producers appear to produce low standard pictures in order to get more money. May I request the Hon. Chief Minister whether he will take the initiative to form a Committee on All-India basis to see that such low standard pictures are prohibited ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தரம் தாழ்ந்த படங்களைத் தயாரிப்பது பற்றி குழு அமைப்பதற்கு நாம் எந்த நடவடிக்கையும் மாநில அளவிலே எடுத்திட இயலாது. அதை மத்திய அரசு தான் எடுத்திட வேண்டும். இது போன்று கேள்விகள் மூலம் ஏற்படுகின்ற விளைவு மத்திய அரசின் காதில் எட்டும் என்று நான் நினைக்கிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி : அண்ணா சிலை அருகில் அரசாங்கத் தோட்ட வாசலில் ராஜா என்ற ஆபாச சினிமாவின் விளம்பரத்தைக் காகிதம் ஒட்டி மறைத்திருந்தார்கள். இப்பொழுது அதை எடுத்துவிட்டார்கள். ஆபாச விளம்பரம் அப்படியே இருக்கிறது. அந்த விளம்பரத்தை மீண்டும் அகற்ற நம் அரசு ஆவன செய்யுமா ?

[1972 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றிய தகவல் எதுவும் என்னிடம் இல்லை. ஆனால், அவர்கள் ராஜா ஒரு ஆபாசப் படம் என்று குறிப்பிட்டார்கள். அது தவறானதாகும். ஏனெனில் படம் சம்பந்தமான விளம்பரம் வேண்டுமானால் ஆபாசமாக ஒட்டப்பட்டிருக்கலாம். படத்தை ஆபாசப் படம் என்று கூறுவது நல்லது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராஜா (சிரிப்பு).

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்தியப் பேரரசு பொதுவாக இந்தியாவின் பண்பாடு, கலாசாரம் எல்லாம் ஒன்று என்று அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள், அப்படிக் கூறிக் கொண்டிருந்தும் இந்திப் படங்கள், தெலுங்குப் படங்கள் என்றால் தணிக்கையாளர்கள் கொஞ்சம் தாராளமாக இருக்கிறார்கள். தணிக்கை விதி தமிழ் நாட்டுக் கென்றால் ஓரவஞ்சனையாகவும், மிகவும் தீவிரமாகவும் இருக்கிறது. இதை மாற்றுவதற்கு நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாம் இந்தத் தணிக்கைக் குழு சம்பந்தமாக பல்வேறு நேரங்களில் நம்முடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறோம். கலாசாரம் அந்தந்த மாநிலத்தில் ஒவ்வொரு வகையில் அமைந்திருக்கிறது. அதுதான் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்பது. நாமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மற்ற மாநிலங்களின், மற்ற மொழியினர்களின் கலாசாரத்தில் தலையிடுவது என்பது இயலாத காரியமாகும். ஆனாலும் அந்தந்த மாநிலத்திற்குத் தணிக்கை குழு இருந்துவிடுமேயானால், அந்தந்த மாநிலத்தில் படங்கள் சீராகவும், செம்மையாகவும் வருவதற்கு வழி ஏற்பட முடியும்.

திரு. சு. துரைசாமி: மாநிலத்திற்கு மாநிலம் கலாசாரம், பண்பாடு வெவ்வேறு விதமாக அமைந்திருக்கிறது. வேறு மாநிலங்களிலுள்ள வருகிற சினிமா படங்கள் ஆபாசமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட படங்களைத் தமிழ் நாட்டில் தடை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தணிக்கை செய்யப்பட்ட படங்களை தடை செய்வதற்கான அதிகாரம் தமிழ் நாடு அரசாங்கத்தினிடம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்தியில் இருக்கக்கூடிய தணிக்கைக் குழுவில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா ? அந்தத் தணிக்கைக் குழு கோஸ்லா கமிஷன் சிபாரிசின்படி என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசு தணிக்கைக் குழுவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தென் இந்திய பிலிம் வர்த்தகச் சங்கத் தலைவர் இடம் பெற்றிருக்கிறார். இப்பொழுது அதன் தலைவராக இருக்கும் திரு ஏ. எல். சீனுவாசன் அதில் இடம் பெற்றிருக்கிறார்.

திரு. பி. ஆர். சோப்ரா.

1972 மார்ச் 29]

திரு. பி. என். சர்க்கார்.
திருமதி வீணாதுக்கல்.
திருமதி பக்ருல்லா.
திரு. பிரதாப் ராவல்.
குமாரி ஏ. எம். நட்கர்ணி.

ஆகியோர்கள் உறுப்பினர்களாக மத்திய தணிக்கைக் குழுவில இடம் பெற்றிருக்கிறார்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த தென் இந்திய பிலிம் வர்த்தக சங்கத் தலைவர் அதில் இடம் பெற்றிருக்கிறார். தமிழ் நாட்டில் இருக்கிற சென்ஸார் போர்டுக்கு உறுப்பினர் போடுவதற்கான உரிமை அதிகாரம் தமிழ் அரசுக்குக் கிடையாது.

திரு. வை. பாலசுந்தரம்: சினிமா படத்தைத் தியேட்டருக்கு உள்ளே போய்ப் பார்ப்பதைக் காட்டிலும், வெளியே போடப்படுகிற பானர்கள், போஸ்டர்கள் வெகு ஆபாசமாக இருக்கின்றன. படத் தணிக்கைக் குழு இதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபற்றி பல நேரங்களில் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதுபோன்ற கேள்விகள் சட்ட மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் பல நேரங்களில் எழுப்பப்படுவதின் அடிப்படையிலே நாட்டிலுள்ள திரைப் படத் தயாரிப்பாளர்களும், திரைப் படத்தை வாங்கி விநியோகிப்பவர்களும், திரைப் படத்தை தியேட்டர்களில் வெளியிடுபவர்களும், அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் இந்தக் கேள்வியின் அடிப்படையில் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினர் மாத்திரம் நடவடிக்கை எடுத்து, அது போன்ற ஆபாசத்தை ஒழித்துவிடுவது இயலாத காரியம். பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும். அதைப் போலத் திரைப்படத் துறையிலுள்ளவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

சைதாப்பேட்டை அருகில் சுரங்கப் பாதை

*768. வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டையில் புதிய சுரங்கப்பாதை யொன்று அமைக்கப்பட்டு வருகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இப் பணி எப்போது முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சி கண்ணம்மாபேட்டையில் ரூ. 25·24 லட்சம் மதிப்பீட்டில் ஒரு சுரங்கப் பாதையை பாதி மானியம் பாதி கடன் உதவியுடன் கட்டி வருகிறது.

(உ) 1972–73-ல்.

திரு. மு. சி. ஆ. ரெத்தினசாமித் தேவர் : தலைவரவர்களே, இந்த வேலை யாருக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது? இதுமாதிரியான வேலைகள் காண்ட்ராக்ட்டுக்கு விடப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்டக்காலத்தில் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது. வேலையை முடிக்க பல வருடங்கள் ஆவதால் விலைவாசிக்கு ஏற்றபடி ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் அந்த வேலைகள் சரிவரச் செய்ய முடியாமல் தடைகள் ஏற்படுகின்றன. எனவே, ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடிக்கும்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த வேலை 12—12—69-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. 18—3—70-ல் ஒப்பந்தக்காரரிடம் இடம் கொடுக்கப்பட்டு, அதிலிருந்து 18 திங்களுக்குள் வேலையை முடிக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி 17—9—71 இல் வேலை முடிந்திருக்க வேண்டும். ஆனால் வேலை முடியவில்லை. மத்திய அரசின் ரெயில்வேயும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் குறித்த காலத்தில் வேலை முடியவில்லை. ரயில் போக்குவரத்திற்குத் தடையில்லாமல் ரயில்பாதையில் அவர்கள் வேலையை முடித்துக் கொடுத்த பின்னால் தான் மற்ற வேலைகளைச் செய்யமுடியும். ஆகவே இதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த காலதாமதம் அனுமதிக்கப்பட்டு, இந்த ஆண்டில் வேலை முடிவடைந்துவிடும்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தப் புதிய சுரங்கப் பாதை அமைப்பதற்கு ஆகும் செலவை மாநகரம் செய்கிறதா, மத்திய அரசு செய்கிறதா அல்லது மாநில அரசு செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பாதை அமைப்பதற்காக ரூ. 25·24 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின்னால் தொழில் நுட்பத் தன்மையின் காரணமாக ரூ. 31·79 லட்சத்திற்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் பாதியை நாம் கடனாக வழங்கியிருக்கிறோம். பாதியை மத்திய அரசு மானியமாக வழங்கியிருக்கிறது.

சிங்காநல்லூர் நகராட்சியில் வீட்டு வரி நிலுவை

* 769. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை ஜில்லா, சிங்காநல்லூர் நகராட்சியில் சென்ற டிசம்பர் மாதம் வரை சுமார் 30 லட்சம் ரூபாய் வீட்டு வரி வசூலாகாமல் இருக்கிறது என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிங்காநல்லூர் நகராட்சியில் டிசம்பர் 1971 வரை ரூ. 27,00,573 வீட்டு வரி நிலுவையுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான வரி பாக்கி இருப்பதற்குக் காரணம் என்ன? நகரசபை விதித்துள்ள அதிகமான வரிவிதிப்பை எதிர்த்து மக்கள் வரி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரி விதிப்பு அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் நகர மன்றத் தலைவர், 1970–71-ம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கும் 31—3—1970 வரை அளித்துள்ள வரி தள்ளுபடி வழங்க வேண்டும் என்றும், இப்போதிருக்கும் ஆண்டொன்றுக்கு 25 சதவீத வரியிலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்றும், புதிய கட்டிடங்களுக்கான 25 சதவீதம் வரிவிதிப்புத் தள்ளுபடியை அனுமதித்த 50 சதவீதமாக மாவட்ட ஆட்சியாளர் அதிகரித்துக் கொடுக்கவும், காலிமனை வரியை 50 சதவீதத் தள்ளுபடியிலிருந்து 62½ சதவீதமாகத் தள்ளுபடி செய்யவும், விவசாய நிலங்களுக்கான வரியை ரத்து செய்யவும் அனுமதி கேட்டார். அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து, 29—1—1972-ல் ஆண்டொன்றுக்கு 25 சதவீதம் வரி விதிப்பை ஆண்டொன்றுக்கு 20 சதவீதமாகக் குறைக்க அனுமதிக்கப்பட்டது. பக்கத்திலுள்ள கோவை நகரில் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டதன் காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 1—4—1972 முதல் அது அமல் செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அரசாங்கத்தின் 25 சதவீதமாக இருந்த வரியைக் குறைத்ததன் அடிப்படையில் எவ்வளவு ரூபாய் வரி குறையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கின்ற கோவையில் 20 சதவீதம் என்றிருப்பதால் சிங்காநல்லூரிலும் அந்த அளவுக்கு இருந்தால் போதும் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. வேறு பல புதுச் சலுகைகள் கேட்டார்கள். அந்தச் சலுகைகள் அனுமதிக்கப்படவில்லை. எவ்வளவு ரூபாய் குறையும் என்பதற்கு விவரம் இல்லை.

சென்னை மாநகராட்சியில் சாலைகள் பராமரிப்பு

*770 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1971–72-ஆம் நிதி ஆண்டில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் சாலைகளைச் செப்பனிட அரசு வழங்கியுள்ள கடன், மானியத் தொகைகள் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சாலைகள் பராமரிப்பு சம்பந்தமாக நடப்பு ஆண்டில் (1971–72-ல்)முறையே ரூ. 20·00 லட்சம் கடனாகவும், ரூ. 30·00 மானியமாகவும் அரசு, சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது.